Please check the examination details below before entering your candidate information

| Candidate surname | Other names |
|---|---|
| | |

Centre Number | Candidate Number

# Pearson Edexcel International GCSE (9–1)

## Friday 24 May 2024

Morning (Time: 2 hours 30 minutes)

Paper reference **4TA1/01**

# Tamil

## PAPER 1: Reading, Writing and Translation

**You do not need any other materials.**

Total Marks

## Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  *– there may be more space than you need.*
- You must **not** use a dictionary.

## Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  *– use this as a guide as to how much time to spend on each question.*

## Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.

*Turn over* ▶


©2024 Pearson Education Ltd.
F:1/1/1/1/1/1

P75562A0124

Pearson

## SECTION A: READING

**Answer ALL questions.**

**Write your answers in the spaces provided.**

**Multiple-choice questions must be answered with a cross in a box ☒. If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒. Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.**

**1** தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி தமிழில் கேள்விகளுக்குரிய சரியான எழுத்தைப் பெட்டியில் எழுதுக.

### ஹோலி பண்டிகை

ஹோலி பண்டிகை, இந்தியாவிலும் உலகெங்கிலும் மிகவும் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்றாகும். இது தீமையின் மீது நன்மையின் வெற்றியைக் குறிக்கிறது. ஹோலியில் பயன்படுத்தப்படும் வண்ணங்கள் வசந்த காலத்தின் பல்வேறு வண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. இந்நாள் வசந்த காலத்தின் வருகையைக் குறிக்கும் ஒரு மகிழ்ச்சியான பண்டிகையாகும்.

இது நண்பர்கள், உறவினர்களைச் சந்தித்து இனிப்புகளைப் பரிமாறி அவர்களை வரவேற்கும் ஒரு வேடிக்கை நிறைந்த நாளாகும். தண்ணீர் பலூன்களுடன், வண்ணம் தெளிக்கும் பொம்மைகளுடன் விளையாடுவது, வீட்டில் சமைத்த இனிப்புகளைச் சாப்பிடுவது வழக்கமாகும்.

பாரம்பரியமாக, ஹோலியின் வண்ணங்கள் சிவப்பு நிற மலர்களைக் கொண்டுள்ள மரங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை மருத்துவக் குணங்களைக் கொண்டவை. ஆனால் நவீனக் காலத்தில் இரசாயன வண்ணங்களின் அதிகமான பயன்பாட்டால் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள் இயற்கையான வண்ணங்களைக் கொண்டு இப்பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என முன்மொழிகின்றன.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

| | | |
|---|---|---|
| **A** வெறுப்பு | **B** வசந்த | **C** திருவிழா |
| **D** ஹோலி | **E** நன்மை | **F** மரங்கள் |
| **G** தீய | **H** பழம் | **I** நிறங்கள் |
| **J** வேடிக்கை | **K** வெல்லும் | **L** இயற்கை |
| **M** இரசாயன | | |

| | |
|---|---|
| **உதாரணம்** | ஹோலி என்பது ஒரு கொண்டாட்டம். |
| **1** (a) | இப்பண்டிகை .................... காலத்தைக் குறிப்பதாகும். |
| **1** (b) | இப்பண்டிகை தீமையை விட நன்மையே .................... என்பதனை வலியுறுத்துகிறது. |
| **1** (c) | ஹோலி கொண்டாட்டத்தில் .................... முக்கியமானதாகும். |
| **1** (d) | .................... வண்ணங்கள் சருமத்திற்குப் பாதுகாப்பானது அல்ல. |
| **1** (e) | இந்நாள் ஒரு .................... நிறைந்த நாளாகும். |
| **1** (f) | பெரும்பாலான .................... மருத்துவ குணங்கள் கொண்டவை. |

**(Total for Question 1 = 6 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**2** சரியான பெட்டிகளில் ஒரு குறுக்கு வைக்கவும். சில வாக்கியங்கள் அல்லது நபர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குறுக்கு இடலாம்.

**நுகர்வியம் பற்றிய விவாதம்,**

சமூகத்தில் விற்கப்படும் பலதரப்பட்ட பொருள்களை பெரும்பாலான சமயங்களில் தங்கள் தேவைகளுக்காகவும், சில நேரங்களில் தங்கள் விருப்பத்திற்காகவும் வாங்குபவர் நுகர்வாளர் ஆவார்.

**நந்தினி:**



நுகர்வியம் *(Consumerism)* ஒரு நபரின் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்கள், சேவைகளை வாங்குவதையும், உபயோகிப்பதையும் ஊக்குவிக்கிறது. இது சமுதாயத்தில், வளர்ந்துவரும் புதுமைப்பாட்டையும், படைப்பாற்றலையும் ஊக்குவித்து நுகர்வோரின் வேலை வாய்ப்புகளையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த ஒரு இன்றியமையாத முறையாகிவிடுகிறது.

**ஸ்வப்னா:**



இந்தியாவிலும் இலங்கையிலும் சமூக அழுத்தம் காரணமாக, மக்கள் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் பதிலாகப் பலவிதமான பொருள்களைத் தொடர்ந்து வாங்குகிறார்கள். இதனால் மக்களிடையே சேமிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது. நுகர்வோர் அடுத்த சிறந்த தயாரிப்புகளையும் சேவைகளையும் தீவிரமாகத் தேடுவதால், உற்பத்தியாளர்களும் புதுமைகளை உருவாக்கும் தொடர்ச்சியான முயற்சியில் தங்கள் பொருட்களை வாங்கவைக்க இலவசமாகத் தயாரிப்புகளை வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**ஸ்வர்ணா:**



முடிவில்லாது உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்குவதன் மூலம் அனைத்து முக்கிய வளங்களும் பாதிப்படைகின்றன. மக்கள் வரவிற்கு மீறிய செலவுகளைச் செய்கின்றனர். ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்காகச் சம்பளக் கடன்கள், குறுகிய காலக் கடன் போன்றவற்றைப் பெறுபவர்களின் எண்ணிக்கை கடுமையாக அதிகரித்துள்ளது. இது மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வு போன்ற பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது என்பது ஆராய்ச்சியின் மூலம் நமக்குத் தெரிய வரும் அதிர்ச்சியான தகவல் ஆகும்.

| | | **நந்தினி** | **ஸ்வப்னா** | **ஸ்வர்ணா** |
|---|---|---|---|---|
| **உதாரணம்** | நுகர்வியம் **<u>பொருட்கள்</u>** வாங்க உதவுகிறது | ☒ | ☒ | ☐ |
| **A** | நுகர்வியம் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கிறது. | ☐ | ☐ | ☐ |
| **B** | மக்களின் சேமிப்புப் பழக்கத்திற்குத் தடையாக இருக்கிறது. | ☐ | ☐ | ☐ |
| **C** | உற்பத்தியாளர்கள் தொடர்ந்து அழுத்தத்தில் உள்ளனர். | ☐ | ☐ | ☐ |
| **D** | கடன் வாங்குவது பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. | ☐ | ☐ | ☐ |
| **E** | படைப்பாற்றலை ஊக்குவிக்கிறது. | ☐ | ☐ | ☐ |
| **F** | மக்கள் பலவிதமான அழுத்தங்களைச் சந்திக்க நேரிடுகிறது. | ☐ | ☐ | ☐ |
| **G** | பொருட்களை வாங்கி வைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். | ☐ | ☐ | ☐ |

**(Total for Question 2 = 8 marks)**

**3** தொடருந்து பற்றிய கட்டுரையைப் படியுங்கள். தமிழில் எண்கள் அல்லது வார்த்தைகளால் பதிலளிக்கவும்.

## தொடருந்து

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடருந்துகளின் கண்டுபிடிப்பு மனித வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும். கிரேக்கம், எகிப்து, ஐரோப்பா போன்ற நாடுகள் எளிய வண்டிகளை இயக்கக் குதிரைகளை முதன்மை சக்தியாகப் பயன்படுத்தின. பின்னர் தொழிற்புரட்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட இங்கிலாந்தின் நீராவி இயந்திரங்கள் எதிர்பார்க்காத வகையில் செயல்பட்டு நவீன கண்டுபிடிப்பை முன்னெடுத்துச் சென்றன.

இன்று சிறிய நகர டிராம்கள், சுரங்கப்பாதை மின்சார பெட்டிகள், நீண்ட பயணங்களுக்கான சாப்பாட்டுப் பெட்டிகள், தூங்கும் வசதிகளுடன் கூடிய நீண்ட தூர பெட்டிகள் போன்ற பல்வேறு வகையான தொடருந்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. தாமஸ் குக் என்ற ஆங்கிலேயர் உணவு மற்றும் தூங்கும் அறைகள் உள்ள வண்டிகளை அறிமுகப்படுத்திய முதல் முகவர் ஆவார்.

தொடருந்து ஆர்வலர்கள் பல்வேறு தொடருந்துகளில் பயணம் செய்து சிறப்பு தொடருந்துகளைத் தேடிப் பார்த்தும் மகிழ்கின்றனர். ஜெம்ஸ் ஆஃப் இந்தியா, பெல்மாண்ட் ராயல் ஸ்காட்ஸ்மேன், ஷிகி ஷிமா எக்ஸ்பிரஸ் ஆகியவை மிகவும் பிரபலமானவை. கோல்டன் சேரியட் என்பது கர்நாடகா, கேரளா, கோவா, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை இணைக்கும் ஒரு ஆடம்பர தொடருந்து ஆகும்.

இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும்பாலானோர் தினசரி தேவைகளான, வேலை, பள்ளிக்குச் செல்ல, விடுமுறை மேற்கொள்ள இவற்றைப் பயன்படுத்துகின்றனர். இந்த நாள்களில் மின்சாரத் தொடருந்துகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த நன்மைகளைக் கொண்டிருப்பதால் அவை எதிர்காலமாக உள்ளன.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(a) தொடருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட நூற்றாண்டைக் குறிப்பிடுக.

**(1)**

.......................................................................................................................................

(b) பழைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்தைக் குறிப்பிடவும்.

**(1)**

.......................................................................................................................................

(c) நவீன இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்கு வழிவகுத்த வரலாற்று மாற்றம் எது?

**(1)**

.......................................................................................................................................

(d) தொலைதூரத் தொடருந்துகளின் வசதிகளைக் குறிப்பிடுக.

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

(e) முதலாவது பயண முகவரின் தேசியத்தை எழுதுக.

**(1)**

.......................................................................................................................................

(f) தொடருந்து ஆர்வலர்கள் ரசிக்கும் செயல்பாடுகளைத் தரவும்.

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

(g) இரண்டு உலகப் புகழ் பெற்றத் தொடருந்துகளின் பெயர்களைத் தருக.

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

(h) தினசரி தொடருந்துப் பயணத்திற்காண ஏதேனும் ஒரு காரணம் தரவும்.

**(1)**

.......................................................................................................................................

(i) மின்சாரத் தொடருந்துகளைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மை ஒன்றை எழுதுக.

**(1)**

.......................................................................................................................................

**(Total for Question 3 = 12 marks)**

DO NOT WRITE IN THIS AREA

**4** (a) இலக்கியத்தின் முக்கியத்துவம் பற்றிப் பின்வரும் பத்தியைப் படித்து தமிழில் பதில் எழுதவும்.

**இலக்கியத்தின் முக்கியத்துவம்**

தமிழ் ஒரு தொன்மையான மொழி. இம்மொழியில் பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், பேரிலக்கியம், நீதி இலக்கியம் என அனைத்து வகையான இலக்கியங்களும் உள்ளன. மக்கள் இன்பத்தை அடையப் பல வழிகள் உள்ளன. பொன்னும் பொருளும் தரும் இன்பத்தைவிட இலக்கியத்தின் இன்பமே மேலானது என்று சான்றோர்கள் வலியுறுத்துகின்றனர். நல்ல இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றது. நம் வாழ்வின் அனைத்து உணர்வுகளையும் வாசகனுக்குத் தெரிவிக்கும் விதத்திலும் இது மிகவும் சிறந்து விளங்குகின்றது.

உதாரணமாக, சிலப்பதிகாரம் என்ற இலக்கியத்தின் கதாநாயகனாகிய கோவலன், சிலம்பு விற்பதற்காக மதுரைக்கு வருகிறான். அப்போது பாண்டிய மன்னனின் அரண்மனையின் கொடிகள் காற்றில் ஆடின. பிற்காலத்தில் மதுரையில் கோவலனுக்கு நடக்கவிருக்கும் ஆபத்தை முன்னறிவிப்பது போன்றும் மதுரைக்கு வரவேண்டாம் என்று இக்கொடிகள் அவனுக்கு எச்சரிக்கையூட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனை இயற்றிய இளங்கோ அடிகள் இதை மிகவும் அழகாகக் கையாண்டுள்ளார்.

எனவே, சிறந்த இலக்கியங்களைக் கற்றுக்கொள்வதன் மூலம், நமது அறிவு வளர்வது மட்டுமில்லாமல் நமது சிந்தனை முறையையும் மேம்படுத்துகின்றது. தொடர்ந்து இலக்கியம் படிப்பதன் மூலம், உங்கள் வாழ்க்கை ஆரோக்கியமாக மாறும். நம் வாழ்க்கையை வளப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மொழியின் ஆழத்தைப் புரிந்து கொள்ளவும் பண்டைய பாரம்பரியத்தைக் கற்றுணரவும் இது உதவுகின்றது.

இலக்கியம் என்பது உலகைப் பற்றி அறிய ஒரு பாதுகாப்பான முறையாகிறது. காலப்போக்கில் புகழ்பெற்ற சிற்பங்கள் மற்றும் கட்டமைப்புகள் அழிகின்றன. ஆனால் ஒரு சிறந்த இலக்கியங்கள் அழியாது நிற்கிறது.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** (a) (i) தமிழ் இலக்கியத்தை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார்?

**(1)**

........................................................................................................................................................................

(ii) ஒரு இலக்கியத்தைப் படிப்பதன் மகிழ்ச்சியை எழுத்தாளன் எவ்வாறு ஒப்பிடுகிறான்?

**(1)**

........................................................................................................................................................................

(iii) வாழ்க்கையில் இலக்கியத்தின் முக்கியத்துவம் என்ன, என எழுத்தாளர் நினைக்கிறார்?

**(2)**

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

(iv) அசையும் கொடிகள் தெரிவிக்கும் செய்தியை விவரிக்கவும்.

**(1)**

........................................................................................................................................................................

(v) நல்ல இலக்கியங்களைப் படிப்பதன் மூலம் என்ன திறமைகளை வளர்த்துக் கொள்ளலாம்?

**(1)**

........................................................................................................................................................................

(vi) இலக்கியத்தைப் படிப்பதன் மூலம், உடல்நல வாழ்க்கை முறையில் ஏற்படும் தாக்கத்தை மதிப்பீடு செய்யவும்.

**(2)**

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

(vii) இலக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆசிரியர் வலியுறுத்தும் இரண்டு காரணங்களை எழுதவும்.

**(2)**

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**4** (b) தமிழ் நீதி இலக்கியம் பற்றிய விவாதத்தைப் படியுங்கள், தமிழில் பதில் எழுதவும்.

### நீதி இலக்கியம்

**செல்வம்:**

தமிழில் எண்ணற்ற நீதி இலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் திருக்குறள், ஆத்திசூடி, நன்னெறி, நான்மணிக்கடிகை போன்ற புகழ் பெற்ற நூல்களும் அடங்கும். சட்டத்தையும் நீதியையும் பற்றிய இலக்கியங்கள் சமூகப் பொறுப்பை வளர்த்துக் கொள்வதையும் ஒரு நல்ல குடிமகனாக இருப்பது எப்படி என்பதையும் நமக்குக் கற்பிக்கின்றன. இத்தகைய இலக்கிய நூல்களைப் படிப்பது சமூகங்களின் கடந்த கால நடைமுறைகளை நமக்குத் தெரிவிப்பதோடு கண்ணியமான வாழ்க்கையை வாழ்வதற்கான தெளிவான விதிகளையும் வகுக்கிறது. நீதி இலக்கியம் மேடை நாடகங்களிலும் பழைய திரைப்படங்களிலும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளிலும் சமூகத்திலும் மாணவர்கள் இவற்றைப் படிக்க முனைகிறார்கள். எனவே, இதை அனைவரும் படித்துப் பயனடைய வேண்டும்.

**மணியன்:**

தற்காலத்தில் இலக்கியம் கற்பது சுவாரசியமோ அவசியமோ அல்ல என நான் நினைக்கிறேன். பழைய நூல்களைப் படிப்பதில் மாணவர்களுக்கு அதிக ஆர்வம் இருப்பதில்லை. அவர்கள் இன்றைய நடை முறை விவகாரங்களிலும் தங்கள் சொந்த ஆர்வமுள்ள தலைப்புகளிலும் ஏதாவது செய்யவே விரும்புகிறார்கள். பெரும்பாலும் இளைஞர்கள் சட்ட இலக்கிய தலைப்புகளைப் பற்றிய அர்த்தமுள்ள வகுப்பு விவாதத்தை விரும்புவதுமில்லை.

பாடத்தின் அடிப்படையில் சட்ட நூல்களில் உள்ள சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தி கடினமான இலக்கண நடையில் எழுதியுள்ளனர். நீங்கள் தேர்ந்தெடுத்த பாடமாக இலக்கியம் இல்லையென்றால், பிற்காலத்தில் இலக்கியத் திறனைப் பயன்படுத்த வேண்டிய அவசியமோ ஆர்வமோ இல்லையென்றாலும், அது மாணவர்களை இவற்றைக் கற்றுக்கொள்வதிலிருந்து சோர்வடையச் செய்கிறது.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**4** (b) (i) செல்வத்தின் கூற்றுப்படி, நீதி இலக்கியத்தைப் படிப்பதன் இரண்டு நேர்மறையான பங்களிப்புகள் யாவை?

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

(ii) மணியனின் கூற்றுப்படி, மாணவர்கள் இலக்கியத்தை விரும்பி படிக்காதிருப்பதற்கான இரண்டு காரணங்களை எழுதவும்.

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

**(Total for Question 4 = 14 marks)**

**TOTAL FOR SECTION A = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION B: WRITING

Answer Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

**Write your answers in the spaces provided.**

**5** நீங்கள் வசிக்கும் இடம் பற்றி 60 முதல் 75 சொற்கள் வரை பயன்படுத்தி தமிழில் எழுதவும். கீழே குறிப்பிட்டுள்ள அனைத்து சொற்களையும் நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

**நீங்கள் வசிக்கும் இடம்**

உங்கள் வசிப்பிடம் பற்றிய விளக்கம்

உங்கள் வசிப்பிடம் பற்றிய விருப்பும் வெறுப்பும்

வசிப்பிடம் பற்றிய வரலாறு

எதிர்காலத்தில் வாழ விரும்பும் இடத்தின் குறிப்பு

**(14)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 5 = 14 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

**6** பின்வரும் மூன்று விருப்ப தேர்வில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, தமிழில் சுமார் **90** வார்த்தைகளில் எழுத வேண்டும்.



**விருப்பத்தேர்வு 1**

(a) காலை உணவைப் பற்றி உங்கள் உள்ளூர் செய்தித்தாளில் ஒரு கட்டுரை எழுதுங்கள்.

- காலை உணவின் முக்கியத்துவம்.
- கடந்த காலத்தில் நீங்கள் சாப்பிட்ட மறக்க முடியாத காலை உணவு.
- எதிர்காலத்தில் நீங்கள் முயற்சிக்க விரும்பும் புதிய உணவுகள்.

**(26)**

**விருப்பத்தேர்வு 2**

(b) உங்கள் புதிய பள்ளியைப் பற்றி உங்கள் நண்பருக்கு மின்னஞ்சல் எழுதுங்கள்.

வணக்கம்,

உங்கள் புதிய பள்ளியை நீங்கள் ரசிக்கிறீர்கள் என்றும், உங்கள் பள்ளியில் நிறையச் செயல்பாடுகள், குழுக்கள் பள்ளிப்பயணங்கள் உள்ளன என்றும் நான் நம்புகிறேன். உங்கள் பள்ளி பற்றிய அனைத்து விவரங்களையும் எனக்கு மின்னஞ்சல் செய்யவும்.

நல்வாழ்த்துக்கள்,

தமிழன்

- நீங்கள் சமீபத்தில் செய்த கூடுதல் பாடத்திட்ட செயல்பாடு.
- பள்ளி மன்றங்களின் நன்மைகள்.
- நீங்கள் செல்ல விரும்பும் ஒரு பள்ளிப் பயணம்.

**(26)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**விருப்பத்தேர்வு 3**

(c) தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உங்கள் தாத்தா பாட்டிகளுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

- இன்றைய தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம்.
- சமீபத்தில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்.
- அவர்கள் தமிழ்ச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த உதவும் வழிகள்.

**(26)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

குறியீடு ☒ [எக்ஸ்] குறியிடுவதன் மூலம் நீங்கள் எந்தக் கேள்வியைத் தெரிவு செய்கிறீர்கள் என்பதைக் குறிக்கவும். நீங்கள் உங்கள் மனதை மாற்றினால், குறியீட்டில் குறுக்கு ☒ வரியை இட்டு, பின்பு புதிய குறியீட்டில் ☒ [எக்ஸ்] குறியிடுவதன் மூலம் உங்கள் புதிய கேள்வியைக் குறிக்கவும்.

**Indicate which question you are answering by marking a cross in the box ☒. If you change your mind, put a line through the box ☒ and then indicate your new question with a cross ☒.**

**Question 6(a)** ☐ **Question 6(b)** ☐ **Question 6(c)** ☐

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 6 = 26 marks)**

**TOTAL FOR SECTION B = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION C: TRANSLATION INTO TAMIL

**Write your answer in the space provided.**

**7** பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்

Libraries are very important. Reading plays a vital role in the lives of young people. The biggest Tamil library is in Chennai. Here, there is a special section for children. On each floor there are books to take home and enjoy. These include the famous Thirkural with its two-line proverbs, as well as texts in many other languages. The building was designed to allow sunlight to enter and provide good access to those with special needs. This unique place has become a great tourist attraction in recent years.

**(20)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA



P 7 5 5 6 2 A 0 2 0 2 4

**(Total for Question 7 = 20 marks)**

**TOTAL FOR SECTION C = 20 MARKS**
**TOTAL FOR PAPER = 100 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**



P 7 5 5 6 2 A 0 2 3 2 4

**BLANK PAGE**

**Source information**

**Question 2**

Image 1 – © Alan_Lagadu/Getty Images

Image 2 – © Bartosz Hadyniak/Getty Images

Image 3 – © Gratsias Adhi Hermawan/Getty Images

**Question 6**

Image – © Jogy Abraham/Getty Images



P 7 5 5 6 2 A 0 2 4 2 4

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA